**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 267/2021**

2024- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04– ஆம் நாள் புதன் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW3 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமதாஸ் | தொழில் | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | கலியபெருமாள் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | குன்னம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 36/2024 |

**வாதி தரப்பு முதல் விசாரணை** :-

நான் தாவா வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 28.07.2015 ஆம் தேதி ந.க.ஆ.2/461/2015 வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்திற்கு பதிலாக சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1) பொதுவாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்பு தான் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான். பொதுவாக விசாரணை சமயத்தில் சொத்து சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிக்கை ஆகியவற்றை பார்வையிட்டு தான் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான். தற்போது என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6–லும் அதே போன்ற நடைமுறைதான் பின்பற்றப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பொதுவாக வருவாய் துறையில் பெயர் நீக்கம், பெயர் சேர்த்தல், விஸ்தீர்ண திருத்தம் ஆகியவை வருவாய் துறை நிலை ஆணை அடிப்படையில் தான் செயல்படுத்துவோம் என்றால் சரிதான்.

**வாதி தரப்பு மறு விசாரணை :–**

இந்த வழக்கில் நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DM JM Court Kunnam